கவனிக்க.- *2010.10.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1679 - 2010 නොවැම්බර් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.11.04

1679 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்
சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்	-
சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்	1934
அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்	-
அரசாங்கசேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்	-
நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்	-
மற்றைய நியமனங்களும் பிறவும்	-
பதிவாளர் நியமனங்களும் பிறவும்	-
அரசாங்க அறிவித்தல்கள்	-
விலைக் கட்டளைகள்	-
இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்	–
இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள்	-
வரவு செலவுத் திரட்டுக்கள்	1937
அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்	1944
மாலுமிகளுக்கு அறிவித்தல்கள்	-
மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்	-

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 29ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2010 இன் இல. 156

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/3067.

இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதால், இளைப்பாறுதல்

பதவி நிரந்தரமாக்குதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக மேஜர் தொன் சந்திரபத்ம முனசிங்க திசாநாயக்க, ஆர்எஸ்பீ, இபஉப (உ/63816)

இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படை நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக மேஜர் தொன் சந்திரபத்ம முனசிங்க திசாநாயக்க, ஆர்எஸ்பீ, இபஉப (உ/63816)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, ஏப்பிறல் 12.

11-76

2010 இன் இல. 157

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/3129.

இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதால், இளைப்பாறுதல்

பதவி நிரந்தரமாக்குதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக மேஜர் விக்கிரமஆரச்சிகே தொன் டன்ஸ்டன் சரத் விக்கிரமசிங்க, மிநிரெ (உ/64430)

இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, மே மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படை நிரந்தரப்படையிலிருந்து வைத்திய காரணிகள் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக மேஜர் விக்கிரமஆரச்சிகே தொன் டன்ஸ்டன் சரத் விக்கிரமசிங்க, மிநிரெ (உ/64430)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, யூலை 19.

11-74

2010 இன் இல. 158

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/3069.

இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல், நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, சனவரி மாதம் 23 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படை நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) இமியா அத்துகோரலலாகே ஜயவர்தன, (உ/63121)

நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றம் செய்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, சனவரி மாதம் 23 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படை நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) இமியா அத்துகோரலலாகே ஜயவர்தன, (உ/63121)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2010, ஏப்பிறல் 12.

11-78

2010 இன் இல. 159

இலங்கை வான்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

இங்கு குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்கள் அவரது பெயருக்கு முன்னால் உள்ள திகதியிலிருந்து தற்காலிக எயார் கொமதோர் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுகிறார்:-

குரூப் கப்ரின் அனில் புஷ்ப ஷாந்த நரசிங்க (01387) நிருவாகம் - 2010.04.10

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, யூன் 08.

11-77

2010 இன் இல. 160

டீஆர்எப்/21/ஆர்ஈசீர்/3135.

இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

இரண்டாம் லெப்டினன்ட் லொக்குபேதுரு ஆரச்சில்லாகே சம்பத் லக்மால், கவீப (உ/65814)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, யூலை 19.

11-75

2010 இன் இல. 161

டீஆர்எப்/21/ஆர்ஈசீர்/3085.

இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, மே மாதம் 05 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

இரண்டாம் லெப்டினன்ட் முதியன்சேலாகே தொன் சமல்க தில்சான் கரெ, (உ/64729)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2010, மே 10.

11-71

2010 இன் இல. 162

டீஆர்எப்/21/ஆர்ஈசீர்/3136.

இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

இரண்டாம் லெப்டினன்ட் கொஸ்வத்தகே தர்ஷண சஞ்ஜீவ, மிநிரெ, (உ/66238)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, யூலை 19.

11-72

2010 இன் இல. 163

டீஆர்எப்/21/ஆர்ஈசீர்/3137.

இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

இரண்டாம் லெப்டினன்ட் மஸ்ரியகே பிரமேத வேதிய பிரணாந்து, மிநிரெ, (உ/66243)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, யூலை 19.

8-73

2010 இன் இல. 164

டீஆர்எப்/21/ஆர்ஈசீர்/3130.

இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, யூன் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

இரண்டாம் லெப்டினன்ட் நிலந்த பிரதீப் சமரவீர, மிநிரெ (உ/65241)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, யூலை 19.

8-70

2010 இன் இல. 165

டீஆர்எவ்/21/ஆர்ஈசீர்/3089.

இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதால், இளைப்பாறுதல்

பதவி நிரந்தரமாக்குதல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2010, மார்ச் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கர்னல் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக லெப்டினன்ட் கர்னல் சமன் நிலவீர, ஏரீஓ, இஇதப (உ/60676)

இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் சிரேஷ்ட உத்தியோகத்தர் 2010, மார்ச் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படை நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் கர்னல் சமன் நிலவீர, ஏரீஓ, இஇதப (உ/60676)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2010, மே 10.

11-69

வரவு செலவுத் திரட்டுக்கள்

கொழும்புப் பல்கலைக்கழகம்

2009 திசெம்பர் 31 இல் இருந்தவாறு ஐந்தொகை

		2009 ரூபா		2008 ரூபா
சொத்துக்கள்:				
நடப்பிலற்ற சொத்துக்கள்:				
ஆதனம், பொறித்தொகுதி, சாதனம்		1,15,04,38,159		1,08,13,07,711
நடைபெறும் வேலை		46,49,72,351		27,36,30,468
முதலீடுகள்		67,75,75,541		50,87,43,504
ஏனைய நடப்பிலற்ற - சொத்துக்கள்				
சில்லறைக் கடன்பெற்றோர்	69,72,492		42,37,273	
பணியாளருக்குக் கடன்களும் முற்பணமும்	13,61,09,831		11,60,54,485	
வழங்கல்கள், சேவைகளுக்கு முற்பணம்	58,71,072		76,315	
நானாவித முற்பணங்கள்	8,22,622		-	
பிற பல்கலைக் கழகங்களிலிருந்து வருமதி	-	14,97,76,017	3,69,649	12,07,37,723
நடப்புச் சொத்துக்கள்:				
பட்டோலைகளும் இருப்புகளும்	64,20,426		67,28,898	
சில்லறைக் கடன்பெற்றோர்	3,23,24,562		2,56,18,090	
வழங்கல்கள், சேவைகளுக்கு முற்பணம்	95,17,442		1,79,43,678	
நானாவித முற்பணங்கள்	20,51,294		42,79,926	
பிற பல்கலைக்கழகங்களிலிருந்து வருமதி	8,75,425		29,89,493	
முற்கொடுப்பனவுகள்	2,72,562		3,20,220	
காசும் காசுக்குச் சமமானவையும்	4,39,55,511	9,54,17,223	4,07,73,603	9,86,53,908
மொத்தச் சொத்துக்கள்		2,53,81,79,290		2,08,30,73,314
உரிமைப் பங்கும் பொறுப்புகளும் - மூலதனம்:				
செலவிட்ட மூலதன மானியம்	1,74,16,21,092		1,53,08,74,786	
செலவிடப்படாத மூலதன மானியம்	(9,52,42,392)		2,41,18,444	
கொடைகளும் நன்கொடைகளும்	5,26,79,097	1,69,90,57,796	5,10,75,521	1,60,60,68,751
திரண்ட நிதி:				
பொது ஒதுக்கம்	1,89,58,102		1,89,58,102	
வரவு செலவுக் கணக்கு	(51,94,28,086)		(65,68,17,160)	
சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்க க/கு	6,21,81,349	(43,82,88,635)	-	(63,78,59,058)
ஒதுக்கங்களும் வரையறுக்கப்பட்ட நிதிகளும்:				
குறிப்பான ஒதுக்கங்கள்	37,37,56,866		28,35,87,900	
அறக்கொடை நிதி	5,81,77,321		5,16,49,778	
ஆராய்ச்சி மானியங்கள்	14,69,05,516		13,25,24,859	
நீடிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்	29,31,77,124		26,14,92,428	
கொடைகளும் நன்கொடைகளும்	30,214		30,214	
ஏனையவை	1,39,97,871	88,60,44,911	1,39,57,121	74,32,42,300
நடப்பிலற்ற பொறுப்புக்கள்:				
பணிக்கொடைக்கு ஏற்பாடு	30,78,41,213	30,78,41,213	30,73,50,755	30,73,50,755
நடப்பிலற்ற பொறுப்புகள்:				
சென்மதிக் கணக்குகள்	2,25,04,766		81,61,302	
மீளளிப்பு வைப்புக்கள்	34,77,767	2,59,82,533	20,18,118	1,01,79,419

		2009 ரூபா		2008 ரூபா
நடப்புப் பொறுப்புக்கள்:				
சென்மதிக் கணக்குகள்	1,19,38,988		1,71,73,648	
அட்டுறு செலவுகள்	3,37,63,417		2,58,21,061	
மீளளிப்பு வைப்புக்கள்	1,18,39,066	5,75,41,472	1,10,96,437	5,40,91,146
மொத்தப் பொறுப்புக்கள்		2,53,81,79,290		2,08,30,73,314

நிதியாளரால் தயாரிக்கப்பட்டு
சான்றுப்படுத்தப்பட்டது.

கே. எஸ். ரி. சுவர்ணலதா ஜயசூரிய,

பேரவைக்காகவும் அதன் சார்பாகவும்.

பேராசிரியர் கிஷானிக்க ஹிரிம்புறேகம
உபவேந்தர்.

பீ. எம். எஸ். பண்டார,
பதில் பதிவாளர்.

கொழும்புப் பல்கலைக்கழகம்

2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று
(தொகைகள் கிட்டிய ரூபாவுக்குச் சீராக்கப்பட்டவை)

		2009 ரூபா		2008 ரூபா
வருவாய்:				
1 ***அரசாங்க மானியம்:***				
(அ) மீண்டுவரும் செலவினத்துக்கு அரச மானியம்	1,03,26,00,000		95,65,00,000	
(ஆ) மூலதனச் சொத்துக்களின் புனரமைப்புக்கும் பராமரிப்புக்கும் அரசாங்க மானியம்	1,17,50,808		1,28,41,848	
(இ) மூலதன மானியம் கடன்தீர்ப்பு	8,87,12,745		16,48,03,138	
(ஈ) ஐ. ரி. மானியக் கடன் தீர்ப்பு	-		2,642	
(உ) உதவுதொகைக்கான மானியம்	1,90,69,000		1,58,58,800	
(ஊ) மகாப்பொலவுக்கான மானியம் (i) ப. மா. ஆ.				
(ii) மகாபொல நம்பிக்கை நிதிய ஆக்க கூறு (வருமானம்)	1,78,55,850		1,83,55,350	
	9,34,88,950	1,26,34,77,353	10,71,67,100	1,27,55,28,877
02. பதிவுக் கட்டணம் (பட்ட - மாணவர்)	28,80,718		22,17,440	
03. பதிவுக் கட்டணம் (பட்டப்பின்படிப்பு மாணவர்)	9,82,561		4,81,000	
04. போதனைக் கட்டணம் (பட்ட மாணவர்)	2,65,76,804		92,85,576	
05. போதனைக் கட்டணம் (பட்டப்பின்படிப்பு மாணவர்)	69,80,105		3'72,000	
06. பரீட்சைக் கட்டணம் (பட்ட மாணவர்)	1,55,400		1,15,970	
07. பரீட்சைக் கட்டணம் (பட்டப்பின்படிப்பு மாணவர்)	7,88,515		1,10,475	
08. வெளிவாரிப் பரீட்சைகள்	-		-	
09. கடன்கள், முற்பணங்களிலிருந்து வட்டி	54,51,399		32,21,054	
10. முதலீடுகளிலிருந்து வட்டி	5,05,98,867		4,88,63,690	
11. வெளியீடுகளின் விற்பனை	4,625		36,600	
12. பழைய இருப்புகளின்/கழித்தவற்றின் விற்பனை	-		-	
13. ஆதனங்களிலிருந்து வாடகை	11,85,858		8,04,022	
14. மருத்துவக் கட்டணம்	1,52,850		3,29,100	
15. நூலகத் தண்டங்கள்	8,20,933		6,29,667	
16. துணை நடவடிக்கைகள்	28,38,460		29,05,300	
17. நானாவித பெறுகைகள்	1,24,67,911		56,74,987	

		2009 ரூபா		2008 ரூபா
18. செலாவணி ஆதாயம்	2,26,303		3,06,438	
19. வெளியாருக்கு வழங்கிய சேவைகள்	-		4,03,548	
20. ஒப்பந்த மீறலிலிருந்து வருமானம்	80,69,971		34,26,351	
21. கொடைகள், நன்கொடைகளிலிருந்து வருமானம்	-		1,40,299	
22. நீடிப்புக் கல்விநெறிகளிலிருந்து வருமானம்	22,69,14,478		9,06,88,621	
23. ஆராய்ச்சி மானியங்களிலிருந்து வருமானம்	13,11,70,108		4,97,54,752	
24. நீடிப்பு/ஆராய்ச்சி நிகழ் திட்டங்களிலிருந்து உருவான வருமானம்	2,47,47,335		-	
25. அறக்கொடைகளிலிருந்து பெறுகைகள்	19,06,136	5,04,919,334	12,32,166	2,20,999,056
		1,76,83,96,687		1,49,65,27,493
செலவினம்:				
ஆளணி ஊதியங்கள்:				
சம்பளங்கள், கூலிகள்	50,34,90,230		50,31,63,769	
ப. சே. நி/ஊ. ந. நி. /ஓய்வூதியகம்	9,77,28,271		9,94,77,459	
படிகள்	14,56,51,892		11,67,20,292	
மேலதிகநேர/விடுமுறை கொடுப்பனவுகள்	2,87,00,808		2,42,49,886	
பிரயாணம்	23,05,620		47,25,176	
வழங்கல்கள்	4,93,90,368		4,84,57,757	
சொத்துக்களின் பராமரிப்பு	1,30,13,415		1,51,58,491	
ஒப்பந்தச் சேவைகள்	15,85,75,482		16,02,01,792	
ஏனையவை:	3,88,56,134		3,54,44,896	
(i) மகாபொல புலமைப்பரிசு - ப. மா. ஆ.	1,73,25,300		1,75,28,500	
(ii) மகாபொல நம்பிக்கை நிதி ஆக்கக்கூறு (செலவு)	9,34,88,950		10,71,67,100	
கல்வி உதவுதொகை	1,66,50,300		1,41,89,022	
தேய்மானம்	8,87,12,745		16,62,39,874	
பணிக்கொடைக்கு ஏற்பாடு	1,87,38,702		2,91,14,862	
நீடிப்புக் கல்விநெறிகள் மீதான செலவினம்	22,69,14,478		9,06,88,621	
ஆராய்ச்சி மானியங்கள் மீதான செலவினம்	13,11,70,108		4,97,54,752	
அறக்கொடைகளும் புலமைப்பரிசில்களும்	19,06,136		12,32,166	
கழித்தவற்றின் விற்பனை இலாப/நட்டக் கணக்கு	-		1,58,490	-
கட்டடம் (மீண்டுவரும்) (புனரமைப்பு)	1,17,50,808	1,64,43,69,747	1,28,41,848	1,49,65,14,752
செலவிலும் கூடிய வருமான மிகை		12,40,26,940		13,182
வரவு செலவு ஒதுக்கீட்டுக் கணக்கு:				
வரவு செலவுக் கணக்கு மீதி		12,40,26,940		13,182
கடந்த ஆண்டுகள் தொடர்பில் சீராக்கங்கள்		1,33,62,134		(16,82,57,892)
வரவுசெலவுக் கணக்கிலிருந்து மு/கொ.மீதி		(65,68,17,160)		(48,85,72,449)
ஐந்தொகைக்கு ஏ/செ. மீதி		(51,94,28,086)		(65,68,17,160)

சீஈ/சீ/யூ(சி)/09/எப்/ஏ 2010, யூன் 26.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2009 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரமும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரமுமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 2009 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளுடனும் 1978 ஆம் ஆண்டின்

16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) மற்றும் 111 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு என்பவற்றின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலகக் நிதியதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவப் பொறுப்புகள்:

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதிய தவறான கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது மற்றும் வழமையாக சமர்ப்பிக்கப்படுவதற்கு உரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், உரித்துடைய கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தல், சந்தர்ப்பங்களுக்கு உகந்த வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றது.

1.3. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை:

எனது கணக்காய்வை அடிப்படையாகக் கொண்டு இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டுமொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகித்தும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது ஆகக்கூடிய அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு அவசியமான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெறப்பட்டன. இதன் பிரகாரம் எனது அபிப்பிராயத்திற்காக போதிய அடிப்படை ஒன்று கணக்காய்வின் மூலம் வழங்கப்படுகிறது என்பது எனது நம்பிக்கையாகும். 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

2. நிதிக்கூற்றுக்கள்:

2.1 அபிப்பிராயம்:

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2009, திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்காக உரிய கணக்கீட்டுப் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கங்களைத் தவிர, கொழும்பு பல்லைகலைக்கழகத்தின் 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிசார் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்:

2.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பணம் :

2009 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகத்தின் வரைபு நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட ரூபா 761,611 கூட்டுத்தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இக் கணக்கீட்டுக்குறைபாடுகள் சீராக்கப்பட்டு திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2010, மே 10 அன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

2.2.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2009, திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடர் கடன் கணக்கின் மீதி ரூபா 89,661,719 ஆனதுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் படி அம்மீதி ரூபா 87,715,985 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. வேறுபாட்டுத்தொகையான ரூபா 19,45,734 இற்கான காரணம் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 தொங்கல் கணக்கு:

வெளிநாட்டு வழங்குநர்களின் தொங்கல் கணக்குகளில் ரூபா 37,541 மீதிகள் முறையே ரூபா 135,011 தொகையான மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 :பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்:

(அ) உடன்படிக்கை மீறப்படுவதற்காக பெறவேண்டிய தொகை:

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன :-

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் 10 ஆம் அத்தியாயத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம், உடன்படிக்கை மீறப்பட்ட 40 விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 2,84,25,044 ஆன தொகை 2009, திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.

(ii) நான்கு விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 93,82,276 தொகையை அறவிடப்படுவதற்காக அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்காக உரிய ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் 08 விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,385,589 தொகைக்காக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறுகின்றது.

(iii) இருபது விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,391,026 தொகை அவர்களது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் பணிக்கொடைத் தொகையில் இருந்து கழிக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டு 07 ஆண்டு காலம் கடந்திருந்ததுடன் உரிய தொகை அறவிடப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அவசியமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 65,899 ரூபா 293,608, ரூபா 1,474,838 மற்றும் ரூபா 51,419 கூட்டுத்தொகைப் பெறுமதியான முறையே கணனிக் கடன், வாகனக் கடன், இடர் கடன் மற்றும் ஊழியர் கடன் மீதிகளில் இருந்து எவ்வித தொகையும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 821,910 பெறுமதியில் எவ்வித தொகையும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.5 **கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை:**

2003, யூலை 18 ஆந் திகதிய தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம், கல்விப் படிப்பணம் மற்றும் மாதாந்த வாழ்க்கைப் படிப்பணம் கருத்திற்கொள்ளப்பட்டு கல்விப் பதவியணியினருக்காக தவறாகக் கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்த பல்கலைக்கழக சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2003, யூலை 31 இற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுவதற்கு கட்டளையிடப்பட்டிருந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.6 செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்:

பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவ அலகினால் பேணப்பட்ட ரூபா 549,227 மீதி காணப்பட்ட வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டின் போது எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும் :-

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு	இணங்காமைகள்
(அ) பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் இல. 29/98, 29/98(i), 07/2007, 7/2007(i), 02/2009 மற்றும் 1994, யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாறாக பல்கலைக்கழகத்தினால் 2003, சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சேர்க்கப்பட்ட பதவியணியினர்களுக்காக மொழித்தேர்ச்சிப் படி செலுத்தப்பட்டிருந்தது.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு	இணங்காமைகள்
(ஆ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் மற்றும் 2003, யூலை 18 ஆந் திகதிய தேசிய பாதீட்டுப் பணிப்பாளரினால் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம்	2005, யூலை 01 ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சேர்க்கப்பட்ட கல்விப் பதவியணிக்காக பல்கலைக்கழக சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுப் பங்களிப்பைக் கணிப்பிடுகையில் கல்விப் படிப்பணம் கவனத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(இ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 153 ஆம் பிரிவு	உரிய மாதாந்தக் கொடுப்பனவு எல்லைக்கு மேற்பட்ட சேவை வழங்குனர்களிடம் இருந்து பிடித்து வைத்தல் வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ) நி. பி. 104	பல்கலைக்கழகத்தின் மத்திய களஞ்சியத்தின் ரூபா 70,398 ஆன இருப்புப் பற்றாக்குறை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(உ) நி. பி. 371(2)	கல்லூரி வளாகம், ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவப் பிரிவு மற்றும் ஶ்ரீபாளி வளாகம் என்பவற்றால் நானாவித செயற்பாடுகளுக்காக பெறப்பட்ட ரூபா 66,33,996 கூட்டுத்தொகையான முற்பணத் தொகையைத் தீர்ப்பதற்கு 01 வருடம் முதல் 31 வருட காலம் கடந்திருந்தது.

3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு:

3.1 நிதிசார் மீளாய்வு:

3.1.1 நிதி விளைவுகள்:

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, பல்கலைக்கழகத்தின் 2009, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நடவடிக்கைகளின் தொழிற்பாடு, மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதன் முன்னர் ரூபா 918,839,656 ஆன பற்றாக்குறையை விளைவித்ததை இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறையான ரூபா 969,328,666 உடன் ஒப்பிடலாம் இதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 50,489,010 ஆல் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டிற்கான ரூபா 1,044,350,808 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக ஆண்டிற்கான மிகை ரூபா 125,511,152 தொகையானதுடன் முன்னைய ஆண்டில் ரூபா 969,341,848 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக அவ்வாண்டின் மிகை ரூபா 13,182 ஆகக் காணப்பட்டது.

3.2 செயற்பாட்டு மீளாய்வு:

3.2:1 கல்விசார் செயற்பாடு:

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) 2009 ஆம் ஆண்டிற்காக சேர்க்கப்பட்ட பட்டதாரி மாணவர் எண்ணிக்கை 2,189 ஆன அதேவேளை இப்பட்டத்தைப் பெற உள்ள மாணவர்களின் எண்ணிக்கை கலைப் பிரிவில் 661 அதாவது 30% உம், சட்டப் பிரிவில் 250 அதாவது 12%, உம், முகாமைத்துவப் பிரிவின் 416 அதாவது 19% உம், விஞ்ஞானப் பிரிவில் 534 ஆன 24% உம், மருத்துவப் பிரிவில் 233 அதாவது 11% உமாக காணப்பட்டது. ஶ்ரீ பாலி பிரிவிற்கு 95 அதாவது 4% உமாக உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டின் போது இறுதியாண்டு மாணவர்களில் பட்டத்தைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 1,838 ஆனதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 24 ஆல் குறைவைக் காட்டியது. இப்பட்டதாரி மாணவர்களில் சட்டப் பிரிவில் 196 பேரும், விஞ்ஞானப் பிரிவில் 332 பேரும், மருத்துவப் பிரிவில் 193 பேரும், ஶ்ரீ பாலி வளாகத்திற்கு 49 பேரும், கலைத் துறையில் 577 பேரும் கல்விப் பிரிவில் 143 பேரும் முகாமைத்துவ மற்றும் நிதிப் பிரிவில் 348 பேரும் அடங்குகின்றனர்.

(இ) 2009 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 8,800 ஆகக் காணப்பட்டது. இம் மாணவர்களில் கல்வி பீடத்தில் 296 பேரும், சட்டப் பீடத்தில் 872 பேரும், விஞ்ஞானப் பீடத்தில் 1,674 பேரும், கலைப்பீடத்தில் 2,785 பேரும், வணிக மற்றும் முகாமைத்துவ பிரிவில் 1,621 பேரும், மருத்துவப் பீடத்தில் 1,234 பேரும், ஶ்ரீ பாலி பீடத்திலி 318 பேருமாக வகுக்கப்பட்டிருந்தனர்.

3.2.2 விரிவுரை மணித்தியாலம்:

கணக்காய்விற்குப் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், பட்டதாரி மாணவர்களுக்காக 2008/2009 ஆம் கல்வி ஆண்டில் உள்ளக விரிவுரைகள் 35,880 மணித்தியாலங்கள் நடாத்தப்படடிருந்தன. இதில் விஞ்ஞான பீடத்திற்கு 6,482 உம், வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்திற்கு 4,950 உம், கல்விப் பீடத்திற்கு 2,761 உம், சட்ட பீடத்திற்கு 3,355 உம், மருத்துவ பீடத்திற்கு 5,456 உம் கலைப் பீடத்திற்கு 12,876 உமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆரம்ப மற்றும் பட்டப்பின்படிப்பு பட்டதாரிகளுக்காக 15,888 வெளிவாரி விரிவுரை மணித்தியாலங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் விஞ்ஞான பீடத்திற்கு 555 உம், வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்திற்கு 600 உம், கல்வி பீடத்திற்கு 226 உம், சட்ட பீடத்திற்கு 927 உம், மருத்துவ பீடத்திற்கு 1,714 உம், கலைப் பீடத்திற்கு 11,866 உமாகக் காணப்பட்டது.

3.2.3 பரீட்சைகள் நடாத்தப்படல்

மீளாய்வாண்டின் போது 06 பீடங்களில் 143 முதலாம் பட்டப் பரீட்சைகளும், 11 பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பரீட்சைகளும், 19 பட்டப் பின்படிப்பு பரீட்சைகளும் 06 ஏனைய டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பரீட்சைகளும் நடாத்தப்பட்டிருந்தன. கல்வி பீடத்தில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவிற்கு 16 பரீட்சைகளும் 7 பட்டப்பின் படிப்பு பரீட்சைகளும் நடாத்தப்பட்டிருந்தன. இவற்றில் 11 பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியாகியிருக்கவில்லை.

3.3 வேலை நீக்கம் செய்யப்பட்ட பதிவாளருக்கு எதிராக நடாத்தப்படும் ஒழுக்காற்று விசாரணை:

பல்கலைக்கழகங்களுக்கான தாபன விதிக்கோவையின் xxii ஆம் அத்தியாயம் 11.1 ஆம் பிரிவிற்கு முரணாக பல்கலைக்கழகத்தின் முன்னால் பெண் பதிவாளருக்கு எதிராக நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணை 5 1/2 மாதங்களுக்கு மேலாக காலம் தாமதித்து ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தயடைந்திருக்கவில்லை.

3.4 மருத்துவ பீடத்தின் மருந்தகப் பிரிவின் கற்பித்தல் மற்றும் பரீட்சை நடவடிக்கைகளுக்காக தீர்மானக் கட்டிட நிர்மாணிப்பு:

மேற்குறித்த கட்டிடத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் அமைச்சரவைக் கேள்விச் சபையினால் கேள்வி கோரப்பட்டு ரூபா 47,644,950 கிரயத்திற்கு (பெறுமதி சேர் வரி தவிர்த்து) ஒப்பந்த அடிப்படையில் 2004, திசெம்பர் 17 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன:-

(அ) அமைச்சின் கேள்விச் சபையினால் உரிய ஒப்பந்தத்தை வழங்குவதற்கு 2004, மார்ச் 04 ஆந் திகதி தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் உரிய ஒப்பந்த நடவடிக்கைகளின் ஆரம்பிப்பு 2004, திசெம்பர் 07 ஆந் திகதி வரை அதாவது 9 மாதங்களுக்கும் மேலான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. திறைசேரியின் ஏற்பாடுகள் கிடைக்கப்பெற்றிராத காரணத்தினால் இந் நிலை ஏற்பட்டதாக கணக்காய்வொன்றிற்கு கிடைக்கப்பெற்ற பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை நிர்மாணிப்பு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினால் 1989, சனவரி மாதம் வழங்கப்பட்டிருந்த நிர்மாணிப்பு நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட கைநூலின் 60(i) ஆம் பிரிவின் பிரகாரம் ஆரம்ப முற்பணத்திற்கு மேலதிகமாக ஒப்பந்தம் பெறுமதியில் 10% ஆன உச்ச எல்லைக்கு உட்பட்ட 02 சந்தர்ப்பங்களின் போது முற்பணம் வழங்கப்படுவது பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும் இச் செயற்திட்ட உடன்படிக்கையில் மேலதிக முற்பணத்தை வழங்குவதற்கு எவ்வித உடன்படிக்கை உடன்பாடும் இல்லாதிருந்ததுடன் சில சந்தர்ப்பங்களின் போது ரூபா 24,611,815 கூட்டுத்தொகையான நேரடியாக வழங்குநர்களுக்கு முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 18 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த ஒப்பந்த நடவடிக்கைகள் 2006, யூன் 08 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 3 1/2 வருடங்களுக்கு மேலான காலமாக நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படுவதற்காக செலவிடப்பட்டிருந்தன. செயற்திட்ட ஆலோசகர்களாக செயற்படும் அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தினால் 2007, யூன் 19 ஆந் திகதி உப வேந்தருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் தாமதக் கட்டணம் அறவிடப்படுவது பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட உடன்படிக்கையில் 47(1) ஆம் பந்தியின் பிரகாரமும் ஒப்பந்தப் பெறுமதியில் 2.5% மும் தாமதிப்புக் கட்டணமாக ரூபா 11,91,124 அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. எனினும் துணைக் கொடுப்பனவுக் கட்டளை இல. 11 இன் கீழ் 2007, யூன் 25 ஆந் திகதி ரூபா 525,000 தாமதக் கட்டணம் அறவிடப்பட்டமை தவிர கட்டுப்பாட்டுச் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் இதன் பின்னர் எவ்வித பணமும் தாமதக் கட்டணமாக ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மூலப் பொருள் முற்பணத்திற்காக கோரல் பிணைக்காப்புறுதி தொடர்பாக செயற்திட்ட உடன்படிக்கையில் எவ்வித ஏற்பாடும் இல்லாதிருந்ததுடன் உரிய காப்புறுதி ஒப்பந்தக்காரரினால் சுயமாக செலவிட நேர்ந்திருக்கையில் கட்டிட மற்றும் நிதிக்குழு அங்கீகாரத்தின் கீழ் பல்கலைக்கழகத்தினால் ரூபா 359,780 கூட்டுத்தொகைப் பெறுமதியான தொகை பல்வேறு காப்புறுதிகளுக்காக நேரடியாகச் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரினால் இக்காப்புறுதிகள் புதுப்பிக்கப்பட்டிராமையால் பல்கலைக்கழகத்தினால் எதிர்நோக்கப்பட வேண்டி இருந்த பாரிய இடரைத் தவிர்ப்பதற்காக மேற்குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

4. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்:**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கூட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது:-

(அ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(ஆ) உடன்படிக்கை கட்டுப்பாடு

(இ) கணக்கீடு

(ஈ) முற்பணத் தீர்ப்பனவு.

எஸ். ஸ்வர்ணஜோதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

11-54

அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"பிஸ்னஸ் டிவலப்மன்ட் எசோசியேட்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியை நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1991.07.23 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட பிஸ்னஸ் டிவலப்மன்ட் எசோசியேட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது பிஸ்னஸ் டிவலப்மன்ட் எசோசியேட்ஸ (பிரைவட்) லிமிட்டெட் எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடியதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து தனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

பீவி 4042.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400 , டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10.

2010, ஒற்றோபர் 13.

11- 05

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"ஈஸ்ட்வெஸ்ட் பாமா (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியை நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1998.06.29 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட ஈஸ்ட்வெஸ்ட் பாமா (பிரைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது ஈஸ்ட்வெஸ்ட் பாமா (பிரைவட்) லிமிட்டெட் எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடியதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து தனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

பீவி 1432.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400 , டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10.

2010, ஒற்றோபர் 13.

11- 06

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் (PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கங்கள் : 281751 மற்றும் 313517 - கபில கலகொட லியனகே ரணசிங்க ஆராச்சிகே பிரியண்கா விமரசாணி

30.03.2010 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த கபில கலகொட லியனகே ரணசிங்க ஆராச்சிகே பிரியண்கா விமரசாணி என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். கே. ஜயவர்தன 09.02.2006 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2561 மற்றும் 4.08.2006 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2856 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 24.02.2010 ஆந் திகதி வரை 24,80,110.28 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி மேற்படி முறி இலக்கங்கள் 2561 மற்றும் 2856 பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 24,80,110.28 வுடன் 25.02.2010 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 19,24,505.91 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 14% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது."

அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அம்பதலன் பால அலுத்குரு கோரளையில் கொடிக்காவத்த-முல்லேரியாவ பிரதேச சபை எல்லையில் அங்கொடை கிராமத்தில் அமைந்துள்ள பட்டதொம்பகாவத்த அல்லது பட்டதொம்பகாவத்த ஓவிட்ட என்ற காணியின் நிலஅளவையாளர் ஜே. பீ. அய். சுபேகோன் 06.05.1995 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2678 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1 என்ற காணியின் எல்லைகள் - வடக்கு : பட்டதொம்பகா கும்புர ; கிழக்கு : வரைபடம் இலக்கம் 2678 இல் லொட்2 ; தெற்கு : லொட் 6 (15 அடி ரோட்) வரைபடம் இலக்கம் 2678 இன்படி ; மேற்கு : நிலஅளவையாளர் ஜே. பி. அயி. அபேகோன் 30.04.1994 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 884 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2 மற்றும் 3 இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 23.6பே. மேற்படி வரைபடம் இலக்கம் 2678 இன் படி. இக்காணி கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் B 780/242 இல் பதிவு செய்யப்பட்டது.

இக்கீழ்க் காணும் காணி ஊடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன்:-

மேற்படி அங்கொடை கிராமத்தில் அமைந்துள்ள பட்டதொம்பகாவத்த அல்லது பட்டதொம்பகாவத்த ஓவிட்ட காணிக்கு மேற்படி வரைபடம் இல. 2678 இல் காண்பிக்கப்பட்ட லொட் 6 (185 அடி ரோட்) இக்காணியின் எல்லைகள் - வடக்கு : வரைபடம் இலக்கம் 884 இல் லொட் 3 மற்றும் வரைபடம் இலக்கம் 2678 இன் லொட் 1, 2 மற்றும் 3 ; கிழக்கு : வரைபடம் இலக்கம் 2678 இல் லொட் 4 ; தெற்கு : வரைபடம் இலக்கம் 2678 இல் லொட் A மற்றும் 5 ; மேற்கு : பிரகத்தி மாவத்தையிலிருந்து செல்லும் ரோட் இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 14.3பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 2678 இல் இக்காணி கொழும்பு காணி பதிவகத்தில் B 780/271 இல் பதிவு செய்யப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

11-18

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

"கேகாலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. எம். சுசில் ஹேரத் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 26.02.2009 ஆந் திகதிய 1584 ஆம் இலக்க முறி மீது இல. 180, கரவ்தெனிய, றுவன்வெல்ல என்ற விலாசத்தில் வசிக்கும் ஷரீப் அலி ரமீஸ் அலி என்பவர் கடப்பாடுடையவராக மக்கள் வங்கிக்கு வருமதியான கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளமையாலும் மக்கள் வங்கிக்கு பதினெட்டு இலட்சத்து நான்காயிரத்து தொளாயிரம் ரூபா (ரூ. 18,04,900) பணத்தொகையும் அத்துடன் 09.07.2009 ஆந் திகதியிலிருந்து 22% வருடாந்த வட்டியுடன் ஏலவிற்பனை நாள் வரை மேலும் வட்டியுடன் மேற்கூறிய மக்கள் வங்கிச் சட்டம் 29L இன் கீழ் அறவிட வேண்டிய பணத்தொகையும் சேர வேண்டியுமுள்ள பணத்தொகை மற்றும் கட்டணத்துடன் ஏதாயினும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின், அவற்றைக் கழித்து சொல்லப்பட்ட கடன் தொகையான பதினெட்டு இலட்சத்து நான்காயிரத்து தொளாயிரம் ரூபா (ரூ. 18,04,900) தற்போது வருமதியாக உள்ளதாலும் அத்துடன் மக்கள் வங்கி பணிப்பாளர் சபையானது, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க சட்டத்தின் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 29L இன் பிரகாரம் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 1584 ஆம் இலக்க முறியின் பிரகாரம் மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கண்டி அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளரான சொக்மன் அன்ட் சமரவீக்ரம என்பவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

அட்டவணை

சபரகமுவமாகாணம், கேகாலை மாவட்டம், தெஹிகம்பல் கோரளை, மெகொடபொத பத்துவ றுவன்வெல்ல பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட கரவ்தெனிய கிராமத்தில் அமைந்துள்ள கிரிவானதென்ன பிட்ட குரஹன்வத்த எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. எல். விஜேவர்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 14.09.2005 ஆந் திகதிய 106/2005 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 4A எனும் இருபத்தைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 25பே.) பரப்பளவான காணியின் எல்லைகள் - வடக்கு : மேற்கூறிய 106/2005 ஆம் இலக்க வரைபடத்தில் 4B ஆம் இலக்க காணித்துண்டும் பிரதான பாதையிலிருந்து இந்தக் காணிக்கு பிரவேசிக்கும் பாதையும் ; கிழக்கு : 1550 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 2A எனும் பகுதி ; தெற்கு : 1550 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 2A எனும் பகுதி; மேற்கு : 1550 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 2 எனும் பகுதியும் பிரதான பாதையிலிருந்து இந்தக் காணிக்கு பிரவேசிக்கும் பாதையும் எனும் எல்லைகளுக்குள் உள்ள காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுடன் பாதை உரிமையுடன்.

இந்தக்காணி அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் S 161/252 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணி கீழ்க்காணும் விதத்தில் மீளளவை செய்யப்பட்டது.

கரவ்தெனிய கிராமத்தில் அமைந்துள்ள தென்னபிட்ட குரஹன்வத்த எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஏ. ரூப ஸ்ரீ ஆனந்த என்பவரினால் தயாரிக்கப்பட்ட 25.11.1998 ஆந் திகதிய 9811 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 4A எனும் இருபத்தைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 25பே.) பரப்பளவான காணியின் எல்லைகள் - வடக்கு : வரைபட இல. 1550 இல் இல. 5 எனும் பாதை; கிழக்கு : வரைபட இல. 1550 இல் இல. 2A; தெற்கு: லொட் 4B; மேற்கு : 1550 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 5 எனும் பாதையும் மற்றும் இல. 2 உம் எனும் எல்லைகளுக்குள் உள்ள காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுடன் பாதை உரிமையுடன்.

இக்காணி அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் S 161/71 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கேகாலை.

மக்கள் வங்கி,
பிரதேச முகாமையாளர் அலுவலகம்,
கேகாலை.

11-116

மக்கள் வங்கி - -கேகாலை பஸார் கிளை

1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 29டி இன் பிரகாரம் தீர்மானம்

மக்கள் வங்கி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 29டி இன் பிரகாரம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 30.07.2010 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் ஏகமனதாக பினவருமாறு தீர்மானிக்கப்பட் டுள்ளது:-

"கேகாலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ரொமெல் விஜேவர்தன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 01.11.2006 ஆந் திகதிய 10389 ஆம் இலக்க முறி மீது உந்துகொட, எலகல்ல, நாரங்செவன எனும் விலாசத்தில் வசிக்கும் பரன கல்லத் ரால்லாகே ராஜா திலகரத்ன மற்றும் பரன கம்லத் ரால்லாகே கல்யானி குமாரி கம்லத் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக மக்கள் வங்கிக்கு வருமதியான கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளமையாலும் மக்கள் வங்கிக்கு நான்கு இலட்சத்து எண்பதாயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு ரூபா எண்பத்தேழு சதம் (ரூ. 4,80,764.87) பணத்தொகையும் அத்துடன் 22.01.2010 ஆந் திகதியிலிருந்து 14.5% வருடாந்த வட்டியுடன் ஏலவிற்பனை நாள் வரை மேலும் வட்டியுடன் மேற்கூறிய மக்கள் வங்கிச் சட்டம் 29L இன் கீழ் அறவிட வேண்டிய பணத்தொகையும் சேர வேண்டியுமுள்ள பணத்தொகை

மற்றும் கட்டணத்துடன் ஏதாயினும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின், அவற்றைக் கழித்து சொல்லப்பட்ட கடன் தொகையான நான்கு இலட்சத்து எண்பதாயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு ரூபா எண்பத்தேழு சதம் (ரூ. 4,80,764.87) தற்போது வருமதியாக உள்ளதாலும் அத்துடன் மக்கள் வங்கி பணிப்பாளர் சபையானது, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க சட்டத்தின் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 29L இன் பிரகாரம் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 10389 ஆம் இலக்க முறியின் பிரகாரம் மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கண்டி அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளரான சொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

அட்டவணை

சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல் கோரளை, கந்துபிட்ட பத்துவ கேகாலை பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட எலகல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ள கேகாலை மாவட்ட நீதிமன்றத்தில் 21959 ஆம் இலக்க பிரவினை வழக்கத் தீர்ப்பின் பிரகாரம் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். பீ. ரனதுங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட K 2296/A எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட நாரங்கஹமுல தென்ன வத்த பிரித்தெடுக்கப்பட்ட இல. 1 (D) எனும் பதினொரு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11.50பே.) பரப்பளவான காணியின் எல்லைகள்-வடக்கு : இல. 1(C) எனும் பகுதி ; கிழக்கு : காணிக்கு செல்லும் பாதை ; தெற்கு : பீ. பீ. ஆர். புஞ்சி பண்டா மற்றும் வேறு ஆட்களுக்குச் சொந்தமான நாரங்கஹமுல தென்ன வத்த மற்றும் ; மேற்கு : பீ. பீ. ஆர். உக்குபண்டா என்பவருக்குச் சொந்தமான நாரங்கஹமுல தென்ன வத்த எனும் எல்லைக்குள் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது கேகாலை காணிப் பதிவகத்தில் E 1149/228 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய கந்துபிட்ட பத்துவ கேகாலை பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட எலகல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ள கேகாலை மாவட்ட நீதிமன்றத்தில் 21959 ஆம் இலக்க பிரிவினை வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். பீ. ரனதுங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட K 2296/A எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட நாரங்கஹமுல தென்ன வத்த பிரித்தெடுக்கப்பட்ட இல. 2 (D) எனும் இருபத்திரண்டு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 22.5பே.) பரப்பளவான காணியின் எல்லைகள்- வடக்கு : மேற்கூறிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட இல. 2(C) எனும் பகுதி; கிழக்கு : கல்எந்தவுடன் இல. 03 எனும் பகுதியும் ; தெற்கு : சிரிவர்தன என்பவருக்குச் சொந்தமான நாரங்கஹமல தென்ன வத்த ; மேற்கு : காணிகளுக்குச் செல்லும் பாதை எனும் எல்லைக்குள் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது கேகாலை காணிப் பதிவகத்தில் E 1149/229 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கேகாலை.

மக்கள் வங்கி,
பிரதேச முகாமையாளர் அலுவலகம்,
கேகாலை.

11-117

மக்கள் வங்கி - -தெரணியகலை கிளை

1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 29டி இன் பிரகாரம் தீர்மானம்

மக்கள் வங்கி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 29டி இன் பிரகாரம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 27.08.2010 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் ஏகமனதாக பினவருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது:-

"கேகாலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. எம். சுசில் ஹேரத் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 08.05.2008 ஆந் திகதிய 649 ஆம் இலக்க முறி மீது இல. 15, நூரி பாதை, தெணியகலை என்ற விலாசத்தில் வசிக்கும் ஹத்கேல கலுவலாகே அருன ரன்பட்டிகே தஸக என்பவர் கடப்பாடுடையவராக மக்கள் வங்கிக்கு வருமதியான கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளமையாலும் மக்கள் வங்கிக்கு இருபது இலட்சம் ரூபா (ரூ. 20,00,000) பணத்தொகையும் அத்துடன் 31.12.2009 ஆந் திகதியிலிருந்து 22% வருடாந்த வட்டியுடன் ஏலவிற்பனை நாள் வரை மேலும் வட்டியுடன் மேற்கூறிய மக்கள் வங்கிச் சட்டம் 29L இன் கீழ் அறவிட வேண்டிய பணத்தொகையும் சேர வேண்டியுமுள்ள பணத்தொகை மற்றும் கட்டணத்துடன் சொல்லப்பட்ட ஏதாயினும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின், அவற்றைக் கழித்து சொல்லப்பட்ட இக்கடன் தொகையான இருபது இலட்சம் ரூபா (ரூ. 20,00,000) தற்போது வருமதியாக உள்ளதாலும் அத்துடன் மக்கள் வங்கி பணிப்பாளர் சபையானது, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க சட்டத்தின் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 29L இன் பிரகாரம் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 649 ஆம் இலக்க முறியின் பிரகாரம் மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கண்டி அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளரான சொக்மன் அன்ட் சமரவீக்ரம என்பவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

அட்டவணை

சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், தெஹிகம்பல் கோரளை, மெகொடபொத யட்டியன்தொட்ட பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கபுலுமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள 09 காணித்துண்டுகள் புலுகஹவத்த பஹல இரவெல்ல எனும் சொத்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. எம். கமகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 31.12.1989 ஆந் திகதிய 599 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் இல. 06 எனும் ஒரு றூட் ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 7.0பே.) பரப்பளவான காணியின் எல்லைகள் வடக்கு : லொட் 07 ; கிழக்கு : மல எல மற்றும் களனி கங்கை ; தெற்கு : களனி கங்கை மற்றும் லொட் 05 ; மேற்கு : பெருந்தெரு எனும் எல்லைகளுக்குள் உள்ள காணித்துண்டும் அதனுள்ளடங்களும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுடன் பாதை உரிமையுடன்.

இக்காணி அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தல் S193/201 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், தெஹிகம்பல் கோரளை, மெகொடபொத யட்டியன்தொட்ட பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கபுலுமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள 09 காணித்துண்டுகள் புலுகஹவத்த பஹல இரவெலல எனும் சொத்து

உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. எம். கமகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 31.12.1989 ஆந் திகதிய 599 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் இல. 07 எனும் ஒன்பது தசம் நான்கு பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 9.40பே.) பரப்பளவான காணியின் எல்லைகள் வடக்கு : லொட் 08 ; கிழக்கு : மல எல ; தெற்கு : லொட் 06 ; மேற்கு : பெருந்தெரு எனும் எல்லைகளுக்குள் உள்ள காணித்துண்டும் அதனுள்ளடங்களும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுடன் பாதை உரிமையுடன்.

இக்காணி அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தல் S193/202 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கேகாலை.

மக்கள் வங்கி,
பிரதேச முகாமையாளர் அலுவலகம்,
கேகாலை.

11-118

இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2009.11.12 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது-

1. ''காலி பிரசித்த நொத்தாரிசு திரு. மன்சூர் மரிக்கார் அத்தாட்சிப்படுத்திய 1995.07.19 ஆந் திகதியிட்ட இல. 6416 இன் பேரில் இல. 71/2, மொரிஸ் ரோட், பங்களாவத்த, காலி என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. தெலிகட ஆச்சாரிகே டார்லின் என்பவரிடமிருந்து முதலும் 2009.09.15 வரை வட்டியும் நான்கு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றுஒன்பது ரூபா நாற்பத்தொரு சதங்களும் (ரூ. 4,52,899.41) அத்துடன் மூன்று இலட்சத்து தொண்ணூற்றாறா யிரத்து ஐநூற்று எண்பத்தொரு ரூபா எண்பத்தொரு சதங்களில் (ரூ. 3,96,581.81) ஆண்டுக்கு ஏழு (7%) வீதத்தில் 2009.09.16 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இல. 6416 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட நான்கு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றுஒன்பது ரூபா நாற்பத்தொரு சதங்களும் (ரூ. 4,52,899.41) அத்துடன் 2009.09.16 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலஙகை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 39, வில்பிரெட் குணசேகர மாவத்தை, கோட்டை, மாத்தறை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. எம். எச். பத்மானந்த சிறிவர்தனவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவும் (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளி யிடுவதற்கு இலங்கை வங்கி காலி மேற்தரக் கிளை முகாமை யாளருக்கு இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டத்திலும், மாநகர சபை எல்லைகளுள் மாஇட்டிப்பேயில் அமைந்த முன்னர் அடகொய்பொலயும் தரகங்கானங்கேவத்த அத்தர, ஓவிட்டயும் வரிமதிபபிலக்கம் 71/2, மொரிஸ் ரோட், என்னும் முகவரியில் அமைந்த சம்பந்தப்பட்ட வீட்டுடன் தெல்கஹவத்த அல்லது தெல்கஹதுரவேவத்த என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். விசும்பெரும தயாரித்த 1980.01.27 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 400B இல் விபரித்த துண்டு 4C என விபரித்த துண்டு 4C1 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : (ஒதுக்கப்பட்ட பாதை) ; கிழக்கில் : துண்டு 4B உம்; தெற்கில் : தெல்கஹதூவ அத்தர ஓவிட்டயும் அந்தகொட அத்தர ஓவிட்டயும் ; மேற்கில் : துண்டு 4C2 உம் எல்லைகளாகக் கொண்டு வரைபடம் இல. 400B இன் படி பதினேழு தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 17.75பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது காலி மாவட்ட காணிப் பதிவகத்தில் A/406/136 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திருமதி டபிள்யூ. ஐ. ஹெட்டிஹேன,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
காலி மேற்தரக் கிளை.

11-122

சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 0066 5000 3657 - ஜீ. பத்மலோஜனி மற்றும் கே. கனேஷமூர்த்தி

2010, செத்தெம்பர் 23 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக குருநாகல் பிரசித்த நொத்தாரிசுவான ஏ. ஜே. பண்டார என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, திசெம்பர் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 2170 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது

பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கனேஷமூர்த்தி பத்மலோஜினி மற்றும் காசிப்பிள்ளை கனேஷமூர்த்தி என்பவர்களில், கடன்பட்டவர் என்ற வகையில் மேற்கூறப்பட்ட கனேஷமூர்த்தி பத்மலோஜினி என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 2170 எனும் ஈட்டுமுறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் ஐம்பத்திரண்டு இலட்சத்து எழுபதாயிரத்து எண்ணூற்று இருபத்து நான்கு ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 52,70,824.86) 2010, சனவரி 19 ஆந் திகதி சம்பத் வங்கி லிமிட்டெட்டிற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட ஐம்பத்திரண்டு இலட்சத்து எழுபதாயிரத்து எண்ணூற்று இருபத்து நான்கு ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 52,70,824.86) 2010, சனவரி 20 ஆந் திகதி முதல் இல. 2170 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நாற்பத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்றறாயிரம் ரூபா (ரூ. 44,96,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு சராசரிக்கு மேலான கடன் வழங்கும் திட்டத்திற்கு அமைவாக எட்டு வீதம் (8%) (at the rate of Average Weighted Deposit Rate) (ADR+8%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2170 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.''

அட்டவணை

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு திருகோணமலை நகர மற்றும் கிரவேட்களுக்குள் பாலையூத்துவின் கிராம சேவகர் பிரிவு இல. 243D இல் திருகோணமலை நகரம் மற்றும் கிரவெட் பிரதேச சபை எல்லைகளுக்குள் வோட் 05 பாலையூத்து கிராமத்தில் அமைந்த கண்டி வீதி, வரிமதிப்பீட்டு இல. 1286 ஐ ஏற்ற ''பாலையூத்து'' என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். பொன்னுசாமி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, யூலை 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 1945 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 911 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : F.V.P. 15 இன் லொட் 908; கிழக்கிற்கு : டீ. எச்.வில்சன் மற்றும் திருமதி ராஜேஸ்வரி பாக்கியநாதன் என்பவர்கள் உரிமை கோறும் F.V.P. 15 இன் லொட் 910 மற்றும் 925 ; தெற்கிற்கு : திருமதி ராஜேஸ்வரி பாக்கியநாதன் உரிமம் கோறும் F.V.P. 15 இன் லொட் 925 மற்றும் F.V.P. 15 இன் லொட் 924 மற்றும் ஜெயகௌரி பாலேந்ரன் உரிமை கோரும் F.V.P. 15 இன் லொட் 912 இன் ஒரு பகுதி மற்றும் ; மேற்கிற்கு: ஜெயகௌரி பாலேந்திரன் உரிமம் கோரும் F.V.P. 15 இன் லொட் 912 இன் ஒரு பகுதி, ஒழுங்கை F.V.P. 15 இன் லொட் 912 இன் ஒரு பகுதி, ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இருபது தசம் எட்டு சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20.80பே.) அல்லது 0.0526 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்தும் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1945 எனும் வரைபடத்திற்கு அமைவாக திருகோணமலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் LD /TG/ 37/142 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் இல. 911 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :-

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு திருகோணமலை நகர மற்றும் கிரவேட்களுக்குள் பாலையூத்துவின் கிராம சேவகர் பிரிவு இல. 243G இல் திருகோணமலை நகரம் மற்றும் கிரவெட் பிரதேச சபை எல்லைகளுக்குள் வோட் 05 பாதையூத்து கிராமத்தில் அமைந்த கண்டி வீதி, வரிமதிப்பீட்டு இல. 1286 ஐ ஏற்ற ''பாலையூத்து'' என அழைக்கப்படும் காணிக்கு நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 1963, யூன் - 1964 ஓகத்து நிலஅளவை திகதியிடப்பட்ட இல. F.V.P. 15 இல் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 911 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : பாதை மற்றும் F.V.P. 15 எனும் வரைபடத்தின் லொட் 908 ; கிழக்கிற்கு : F.V.P. 15 இன் லொட் 910 ; தெற்கிற்கு : F.V.P. 15 இன் லொட் 925 ; மற்றும் மேற்கிற்கு : F.V.P. 15 இன் லொட் 912 ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இருபது தசம் எட்டு சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20.80பே.) அல்லது 0.0526 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்தும் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூடியது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

11-119

இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2010.08.19 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது-

1. ''பிரசித்த நொத்தாரிசு திருமதி ஈ. கே. எச். எம். கருணாதிலக்க அத்தாட்சிப்படுத்திய 2007, நவெம்பர் 19 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 654 இன் பேரில் கொழும்பு வீதி, கொட்டிகல, ஹந்தபாங்கொட என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. லலித் கொடிப்பிலிஆரச்சி மற்றும் திருமதி கமாலி சாகரிகா வெலிக்கன்ன ஆகியோரிடமிருந்து கூட்டாகவும் தனித்தனியாகவும் முதலும் 2010.06.22 வரை வட்டியும் நாற்பத்தாறு இலட்சத்து பதினான்காயிரத்து முந்நூற்று எழுபத்தெட்டு ரூபா நாற்பத்துமூன்று சதங்களும் (ரூ. 46,14,378.43) அத்துடன் முப்பத்தொன்பது இலட்சத்து இருபத்துநான்காயிரத்து நாநூற்று நாற்பத்தாறு ரூபா அறுபத்து நான்கு சதங்களில் (ரூ. 39,24,446.64) ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்தில் 2010.06.23 தொடக்கம்

கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட ஈட்டு முறி மீது வருமதியாக உள்ள மேலே "1" இல் குறிப்பிட்ட தொகையையும் அத்துடன் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 290, ஹவ்லொக் ரோட், கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்கிரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக் கமைய இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், றைகம் கோறளை, உடுகஹபற்றுவில் ஹொரணை பிரதேச சபை எல்லைகளுள் (போருவதண்ட உப அலுவலகம்) கொட்டிகல மற்றும் அரக்காவில கிராமத்தில் அமைந்த மெதகொடெல்லஹேன மற்றும் தெம்பஸ்ஸஓவிட்ட என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஓ. சீ. பெர்ணாடோபுள்ளே தயாரித்த 1994, யூன் 16 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 703 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : வரைபடம் இல. 532 இல் துண்டு ඈ மற்றும் துண்டு ච ; கிழக்கில் : வரைபடம் இல. 532 இல் துண்டு ඉ இன் மீதிப்பாகமும்; தெற்கில் : பௌத்த கோவில் காணியும் ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 532 இல் துண்டு ඇ இன் மீதிப்பாகமும் துண்டு ඈ யும் எல்லகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 703 இன்படி ஒரு றூட் நான்கு தசம் ஆறு ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 4.67பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹொரணை காணிப் பதிவகத்தில் E158/208 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

வீ. டி. ஜயலத்,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
இங்கிரியக் கிளை.

11-123

பிரதேச அபிவிருத்தி வங்கி - பிடிகல கிளை

(முன்னர் றுஹுணு அபிவிருத்தி வங்கி என அறிமுகம் செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆவது அதிகாரத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பிரசுரிக்கப்பட்ட 1998.04.24 ஆந் திகதிக்குரிய அதி விஷேட அரச வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின் படி, 2008.11.18 ஆந் திகதியில் நடாத்தப்பட்ட பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்திலே கீழக்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

" பிரதேச அபிவிருத்தி வங்கியின் பிரசித்தி பெற்ற சட்டத்தரணி யும் நொத்தாரிசு திரு. எஸ். எம். பீ. சில்வா அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.08.30 ஆந் திகதிக்குரிய இல. 417 எனும் ஈட்டுப்பத்திரத்தின் கீழ், அறவிடப்பட வேண்டிய பணம் செலுத்தல், "திலான்" அமுகொட என்ற முகவரியில் வசிக்கும் தவலம கமகே பியசீலி, பின்னதுவகே ரத்னசிரித சில்வா அல்லது பின்னதுவ ஹேவா ரத்னசிரிவும் பின்னதுவகே திலான் த சில்வா ஆகியோர்களினால் செலுத்தாதுவிடப்பட்டதாலும் அவ்ஈட்டுப் பத்திரத்தின் கீழ் இரண்டு இலட்சத்து முப்பதாயிரத்து இருபத்து மூன்று ரூபா எணபத்தாறு சதமும் (ரூ. 2,30,023.86) பணம் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு செலுத்த வேண்டி இருப்பதாகவும், 2008.08.08 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 24% படி இரண்டு இலட்சத்து முப்பதாயிரத்து இருபத்துமூன்று ரூபா எண்பத்தாறு சதத்து (ரூ. 2,30,023.86) க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து வட்டியும் சேர்த்து வேறு ஏதாவது பணம் கிடைக்க இருப்பின் அவற்றைக் குறைத்துக் கொண்டும், அறவிட்டுக் கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம் பெற்ற ஏல விற்பனை யாளரான திரு ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் இலக்கம் 417 என்ற ஈட்டுப்பத்திரத்தின் கீழ் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப் பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானித்துள்ளது."

ஈடு வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பென்தொட்ட வலல்லாவிட கோரளேயெ, தலகஸ்பேயில் அமைந்துள்ள கலவிடகொடல்ல எனும் காணியின் இல. 1653 எனும் வழக்கின் பிரகாரம் 1947, திசெம்பர் 11 ஆந் திகதி பிரித்து வேறாக்கப்பட்ட இல. "சீ" எனும் துண்டென வடக்கே : இக்காணியின் "பீ" என்ற துண்டும் ; கிழக்கே : தும்பரயா வயலும் ; தெற்கே : தும்பரயா வயலும் ; மேற்கே : மஹகும்புரயும் எல்லையாக இருபத்தாறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 26பே.) கொண்ட மிகப்பெரிய காணியும்.

மீண்டும் மானக ஐ. கொடம்பகே என்ற அதிகாரம்பெற்ற அளவையாளரினால் 2007.05.30 ஆந் திகதி அளந்து ஒழுங்கு செய்யப் பட்ட 861-2007 வரைபடத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட தலகஸ்பெயில் அமைந்துள்ள கலவிட கொடெல்ல என்ற காணியின் சீ எழுத்தைக் கொண்ட வடக்கே : இக்காணியின் "பீ" எழுத்தைக் கொண்ட துண்டும்; கிழக்கே : பாதையும் ; தெற்கே : தும்பரயா வயலும் ; தெற்கே : மஹகும்புரயும் எல்லையாக இருபத்து நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 24பே.) கொண்ட மிகப்பெரிய முழு காணியும். நிலம் உட்பட அனைத்து பயிர்ச்செய்கை மரங்கள், பழவர்க்கங்கள் போன்ற அனைத்துமாகும்.

இக்காணி பலப்பிட்டி காணிப் பதிவு அலுவலகத்தில் பி421/272 இல் சங் 13/115 என்ற புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் ஆணைப்படி,

அமரசேன பிரதாபசிங்ஹ,
பொது முகாமையாளர்.

பிரதேச அபிவிருத்தி வங்கி,
தென் மாகாண அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை.

11-23

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"லங்கா ட்ரேடர்ஸ் என்ட் கொமடிடீஸ் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியை நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1987.10.30 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "லங்கா ட்ரேட்ஸ் என்ட் கொமடிடீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "லங்கா ட்ரேட்ஸ் என்ட் கொமடிடீஸ் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து தனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

பீவி 6753.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400 , டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10.
2010, ஒற்றோபர் 13.

11-07

இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2010.08.19 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது-

1. "பிரசித்த நொத்தாரிசு திருமதி எம். சீ. ஜயராணி பீரிஸ் அத்தாட்சிப்படுத்திய 2007, சனவரி 9 ஆந் திகதியிட்ட முறி இல. 14636 இன் பேரில் இல. 114, ரிவர்சைட் இன் எல்லதொட, பண்டாரவளை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. உடுவ விதானலாகே தொன் எட்வேர்ட் மற்றும் கங்காஹத வத்த ஆரச்சிகே சுஜீவ சியாமலி பெரேரா ஆகியோரிடமிருந்து முதலும் 2010, யூலை 11 வரை வட்டியும் ஐம்பத்தெட்டு இலட்சத்து எழுபத்தோராயிரத்து ஐநூற்று இருபத்தேழு ரூபா தொண்ணூற்று இரண்டு சதமும் (ரூ. 58,71,527.92) அத்துடன் முப்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று இருபத்தொரு ரூபா தொண்ணூற்று மூன்று சதத்தில் (ரூ. 35,52,821.93) ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்தில் 2010.07.12 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட முறி இல. 14636 மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஐம்பத்தெட்டு இலட்சத்து எழுபத்தோராயிரத்து ஐநூற்று இருபத்தேழு ரூபா தொண்ணூற்று இரண்டு சதமும் (ரூ. 58,71,527.92) அத்துடன் 2010.07.12 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 48, களுகல்பிட்டிய, பதுளை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. டபிள்யூ. ஜயதிலக்கவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பண்டாரவளைக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், அல்ல பிரதேச செயலகப் பிரிவில் கும்பல்வெல கோரளையில் ராவண அல்ல கிராமத்தில் (F.V. P. 280) அமைந்த "அராவெஹேன" என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். பீ. குணரத்ன தயாரித்த 2005.08.27 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2245 இல் துண்டு 1 என விபரித்த காணி மேற்குறிப்பிட்ட வரைபடத்தின் படி வடக்கில் : F.V. P. 280 இல் துண்டு 73 உம், மல கந்துரயும் ; கிழக்கில் : கிரிந்தி ஓயாவும்; தெற்கில் : அட்டகெஹெல ஆரயும், ஆரயும் (வரண்ட) ; மேற்கில் : பிரதான றோட்டும் எல்லைகளாகக் கொண்டு பன்னிரண்டு ஏக்கர் மூன்று றூட் முப்பத்திரண்டு தசம் ஏழு பேர்ச்சுகள் (12ஏ. 3றூ. 32.7பே.) அல்லது ஐந்து தசம் இரண்டு நான்கு இரண்டு ஹெக்டயர்கள் (5.242 ஹெக்.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது J161/158 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டபிள்யூ. எம். என். டபிள்யூ. வீரசிங்க,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பண்டாரவளை.

11-124

அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்
2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது
"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"
(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

	ரூபா	ச.
ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய	137	00
மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும்	137	00
ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம்	1,300	00
இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம்	2,300	00

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு)	முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச.	தபால் செலவு ரூபா ச.
I வது பகுதி :		
I வதுதொகுதி	2,080.00	3,120.00
II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன)	1,300.00	3,120.00
III வது தொகுதி	780.00	3,120.00
I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட)	4,160.00	6,240.00
II ஆவது பகுதி	580.00	3,120.00
III வது பகுதி	405.00	3,120.00
IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி)	890.00	2,400.00
V வது பகுதி	860.00	420.00
VI வது பகுதி	260.00	180.00
அதிவிசேட வர்த்தமானி	5,145.00	5,520.00

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

	விலை ரூபா ச.	தபால் செலவு ரூபா ச.
I வது பகுதி :		
I வது தொகுதி	40.00	60.00
II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன)	25.00	60.00
III வது தொகுதி	15.00	60.00
I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட)	80.00	120.00
II வது பகுதி	12.00	60.00
III வது பகுதி	12.00	60.00
IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி)	23.00	60.00
V வது பகுதி	123.00	60.00
VI வது பகுதி	87.00	60.00

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.

வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

முக்கிய கவனிப்பு. *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.*

அட்டவணை - 2010

மாதம்		வெளியீட்டு நாள்			அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்		
நவெம்பர்	..	வியாழன்	04.11.2010	..	நண்பகல் 12	வியாழன்	21.10.2010
		வெள்ளி	12.11.2010	..	நண்பகல் 12	வெள்ளி	29.10.2010
		வெள்ளி	19.11.2010	..	நண்பகல் 12	வியாழன்	04.11.2010
		வெள்ளி	26.11.2010	..	நண்பகல் 12	வெள்ளி	12.11.2010
திசெம்பர்	..	வெள்ளி	03.12.2010	..	நண்பகல் 12	வெள்ளி	19.11.2010
		வெள்ளி	10.12.2010	..	நண்பகல் 12	வெள்ளி	26.11.2010
		வெள்ளி	17.12.2010	..	நண்பகல் 12	வெள்ளி	03.12.2010
		வெள்ளி	24.12.2010	..	நண்பகல் 12	வெள்ளி	10.12.2010
		வெள்ளி	31.12.2010	..	நண்பகல் 12	வெள்ளி	17.12.2010

அட்டவணை - 2011

சனவரி	..	வெள்ளி	07.01.2011	..	நண்பகல் 12	வெள்ளி	24.12.2010
		வெள்ளி	14.01.2011	..	நண்பகல் 12	வெள்ளி	31.12.2010
		வெள்ளி	21.01.2011	..	நண்பகல் 12	வெள்ளி	07.01.2011
		வெள்ளி	28.01.2011	..	நண்பகல் 12	வெள்ளி	14.01.2011

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.